**<u>IN THE COURT OF THE SUBORDINATE JUDGE OF ATTUR</u>**

**DEPOSITION OF WITNESS**

**D.W.1**

**O.S No. 143/2018**

| | | |
|---|---|---|
| **Name** | : | பழனிவேல் |
| **Father's Name** | : | |
| **Village** | : | |
| **Taluk** | : | |
| **Caste** | : | |
| **Calling** | : | |
| **Religion** | : | |
| **Age** | : | |

**Solemnly affirmed in accordance with provisions Act of 1873 of the day of 23.04.2025**

**பி.வா.சா.1 முதல் விசாரணை:-**

எனது முதல் விசாரணையை எழுத்து வடிவ பிரமாண சாட்சியாக தாக்கல் செய்கிறேன். அதில் கண்டுள்ள வாசகங்கள் என்னால் சொல்லப்பட்டுள்ளது தான். அதில் உள்ள சங்கதிகள் எல்லாம் படித்துப்பார்த்து கையெழுத்து செய்தேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். நான் இவ்வழக்கின் பிரதிவாதி. ஆவணங்கள் எதுவும் இல்லை.

**<u>குறுக்கு விசாரணை</u>**

1) 1ம் வாதியும், நானும் 22.05.2012ல் ஒரு கிரைய பத்திரம் ஏற்படுத்திக்கொண்டதாக ஒரு பத்திரம் ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்த வழக்கில் 1ம் வாதியும், அவரின் பேரன் மற்றும் அவரின் மனைவி அனைவரும் சேர்ந்து மேற்படி கிரைய ஒப்பந்த பத்திரம் செல்லாது என்றும், 22 கடன் உறுதி சீட்டுகள், 9 காசோலைகள் மற்றும் முத்திரை தாள்கள் மற்றும் பச்சை தாள்கள் ஆகியவற்றை திரும்ப தர கோரி தான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரிதான்.

2) நான் இந்த வழக்கில் பதிலுரை மற்றும் கூடுதல் பதிலுரை தாக்கல் செய்துள்ளேன். அந்த விவரங்கள் எனக்கு நன்கு தெரியும் என்றால் சரிதான். எனக்கு 1 வாதிக்கும் ஏற்படுத்திக்கொண்டதாக கிரைய ஒப்பந்த பத்திரத்தில் ரூ. 4,75,000/- கிரைய தொகையாகவும், அதற்கு முன் பணமாக ரூ. 1,75,000/- கொடுத்தாகவும் கண்டுள்ளது என்றால் சரிதான். அதில் மீதி கிரைய அட்வான்ஸ் தொகை ரூ. 3 இலட்சத்தை 18 மாத கால இடைவெளியில் செலுத்தி கிரைய பத்திரம் செய்துக்கொள்ள வேண்டும் என்று எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

3) நான் 18 மாத கால இடைவெளியில் 1ம் வாதிக்கு நான் கிரைய ஒப்பந்த படி கிரைய பத்திரம் செய்து தர கோரி வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பவில்லை. ஆனால் நேரடியாக கேட்டேன். ஆனால் அவர் இப்போது வருகிறேன் அப்போது வருகிறேன் என்று சொல்லி காலம் தாழ்த்தி வந்தார். நான் ஏற்றத்ததை ஆற்றுக பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்யவில்லை. 1ம் வாதி எனக்கு ஏற்படுத்தி கொடுத்த கிரைய ஒப்பந்த பத்திரம் அசல் என்னிடம் தான் உள்ளது. அதை நீதிமன்றத்தில் ஒப்படைக்க தயாராக உள்ளேன்.

4) 1ம் வாதி எனக்கு பத்திரம் ஏற்படுத்திக்கொடுத்த சமயத்தில் 2, 3 வாதிகள் என்னிடம் 22 கடன் உறுதி சீட்டுகள், 9 காசோலைகள் மற்றும் முத்திரை தாள்கள் மற்றும் பச்சை தாள்கள் கொடுத்தார்கள் என்றும் அதை நான் பெற்றுக்கொண்டேன் என்று வழக்குரையில் சொல்லியுள்ளார்கள். ஆனால் நான் அவ்வாறு எதுவும் வாங்கவீல்லை. வழக்குரையின் 3 பக்கத்தில் 6வது பத்தியில் 10 வது வரியில் ஆத்தூர் கரூர் வைசியா வங்கி கிளை காசோலை 000001 to 000003 வரையிலான 3 காசோலைகள் என்னிடம் கொடுத்தாக சொல்லியுள்ளார்கள் என்றால் நான் அவ்வாறு எதுவும் வாங்கவில்லை.

5) நான் முதலில் தாக்கல் செய்த பதிலுரையில் அவ்வாறு வாதிகளிடம் வாங்கவில்லை என்று 6 பத்தியில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான் (Hence the allegations of detailing unfilled up pronotes, cheques from the third plaintiff is all False). நான் பதிலுரை தாக்கல் செய்த பின்னிட்டு மேற்படி 3 காசோலைகளை வைத்து துர்கா தேவி மீது ஆத்தூர் விரைவு நீதிமன்றத்தில் காசோலை வழக்கு STC. No. 33/2021 என்ற வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். ஆனால் அதற்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை. இந்த வழக்கு தாக்கல் செய்த பின்னிட்டு தான் மேற்படி காசோலை வழக்கு STC. No. 33/2021 தாக்கல் செய்துள்ளேன். மேற்படி வழக்கு விசாரணைக்கு பின்னிட்டு தள்ளுபடி செய்யப்பட்டு துர்கா தேவி விடுதலை செய்யப்பட்டுள்ளார் என்றால் சரிதான்.

6) என்னிடம் காட்டப்படும் தீர்ப்புரை காசோலை வழக்கு STC. No. 33/2021 யின் தீர்ப்பு என்றால் சரிதான். அது **வா.சா.ஆ.7** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அந்த 3 காசோலைகளுக்கும் தலா ரூ. 2,00,000/- வீதம் மொத்தம் ரூ. 6,00,000/- கடன் வாங்கியதாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். பதிலுரை தாக்கல் செய்த பின்னிட்டு ரவிந்திரன் (2ம் வாதி) பெயரில் காசோலை வழக்கு STC. No. 39/2021 யில் ரூ. 7 இலட்சத்திற்கு தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். மேற்படி வழக்கு விசாரணைக்கு பின்னிட்டு தள்ளுபடி செய்யப்பட்டு ரவிந்திரன் விடுதலை செய்யப்பட்டுள்ளார் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் தீர்ப்புரை காசோலை வழக்கு STC. No. 39/2021 யின் தீர்ப்பு என்றால் சரிதான். அது **வா.சா.ஆ.8** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

7) நான் இந்த வழக்கில் 06.08.2022ல் ஒரு கூடுதல் பதிலுரை தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். அந்த கூடுதல் பதிலுரையில் 22.11.2013 முதல் 22.07.2019 வரை கால வாய்தா நீட்டிப்பு செய்தாகவும், அதற்கு ஒரு தனியாக ஒரு ரசீது 22.11.2013ல் எழுதிக்கொடுக்கப்பட்டுள்ளதாக சொல்லியுள்ளேன். மேற்படி ரசீதை

நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஒப்படைத்துள்ளேன். சாட்சி பின்னிட்டு நீதிமன்றம் குறிப்பிட்டால் அதை ஒப்படைக்க தயாராக உள்ளேன் என்று கூறுகிறார்.

8) நான் அவ்வாறு கால வாய்தா நீட்டிப்பு செய்து ரூ. 50,000 கொடுக்க வேண்டும் என்று என்னுடைய கூடுதல் பதிலுரையில் சொல்லவில்லை என்றும் என்னுடைய முதல் விசாரணையில் தான் முதலில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நான் அந்த ரசீதை தாக்கல் செய்ய தயாராக உள்ளேன். என்னிடம் உள்ள அசல் கிரையஒப்பந்த பத்திரத்தையும், ரசீதையும் நான் நாளை ஒப்படைக்க தயாராக உள்ளேன்.

வழக்கறிஞர் வேண்டுகோளின் பெயரில் குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

" என்னால்/ என் முன்பாக மேற்படி சாட்சியம் பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது."

GANESAN S Digitally signed by GANESAN S Date: 2025.04.23 19:01:14 +0530

**Subordinate Judge, Attur.**